॥ श्रीः ॥

॥ आदित्यहृदय स्तोत्रम् ॥

ஆதித்யஹ்ருதய ஸ்தோத்ரம்.



1966.

|| श्रीः ||

|| आदित्यहृदय स्तोत्रम् ||

ஆதித்யஹ்ருதய ஸ்தோத்ரம்.

நாகரம், தமிழ் மூலம், பொழிப்புரை,
விசேஷக் குறிப்புகளுடனும்,
பாராயணக்ரமத்துடனும்,
நாமாவளியுடனும்
கூடியது.

தபால் செலவு வேறு.] [விலை 30 பைசா

Second Edition Januaray 1966

Printed and published by
S. Kalyanasundaram
Manager,
Sri Janardana Printing Works Limited,
Town High School Road,
Kumbakonam.

ஸ்ரீ:

ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்திரம்

பாராயணம் செய்யும் கிரமம்.

ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்ரமானது உயர்ந்த மந்த்ர ரூபமாயிருப்பதால் இதைப் பாராயணம் செய்யும் முறையைப்பற்றி திலகவ்யாக்யானத்தில் சில விசேஷங்கள் காணப்படுகின்றன. இது வரை அவைகள் வெளிப்பட்டதாகத் தெரியவில்லை யாகையால் இங்கு குறிக்கப்படுகின்றன.

பாராயணம் செய்கிறவர்கள், காலையில் ஸ்நாந, ஸந்த்யாவந்தனாதி நித்ய கர்மாக்களைச் செய்த பிறகு, ஸூர்யனுக்கு அபிமுகமாகயிருந்து மூன்று தடவை ஆசமனம் செய்யவேணும்.

பிறகு பவித்ரம் தரித்து பிராணயாமம் செய்து தங்கள் தங்கள் இஷ்டமான பலனைச் சொல்லி ஸங்கல்பம் செய்து, ஆதித்ய தேவதைக்கு, ஆவாஹான அர்க்ய, பாத்ய உபசாரங்கள் நடத்தி, அக்ஷதை புஷ்பங்களால் பூஜித்து நைவேத்யம் ஸமர்ப்பித்து கர்பூர நீராஜனம் செய்து பிறகு பாராயணம் துடங்கவேணும்.

பாரயணம் ஆரம்பிக்கு முன்பு:—

अस्य श्रीमदादित्यहृदय स्तोत्रस्य, अगस्त्यः ऋषिः अनुष्टुप्छन्दः, आदित्यहृदय भूतः भगवान् ब्रह्मा देवता। सर्वत्रजयसिद्धौ विनियोगः।

ओं तत्सवितुः— ज्ञानायहृदयाय नमः।
,, वरेण्य— ऐश्वर्यायशिरसेस्वाहा।
,, भर्गोदेवस्य— शक्त्यै शिखायैवषट्।
,, धीमहि— बलायकवचाय हुम्॥
,, धियोयोनः— तेजसे नेत्राभ्यां वौषट्
,, प्रचोदयात्— वीर्यायास्त्राय फट्॥

[அஸ்ய, ஸ்ரீமத் ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்ரஸ்ய, அகஸ்த்ய ரிஷி:, அனுஷ்டுப் சந்த: ஆதித்ய ஹ்ருதய பூத: பகவான் பிரம்ஹா தேவதா! ஸர்வத்ர ஜய ஸித்தௌ விநியோக:]

ஓம் தத்ஸவிது:— ஞாநாய ஹ்ருதயாய நம: 1
(என்று ஹ்ருதயத்தை தொடவும்)

,, வரேண்யம்— ஐஸ்வர்யாய ஶிரஸே
ஸ்வாஹா (சிரஸ்)

,, பார்கோ தேவஸ்ய— ஶக்த்யை ஶிகாயை
வஷட், (சிகை)

,, தீமஹி— பலாய கவசாய ஹூம்:
(இரண்டு பார்ச்வங்கள்)

,, தியோ யோந:— தேஜஸே நேத்ராப்யாம்
வௌஷட். (இரு கண்கள்)

,, ப்ரசோதயாத்:— வீர்யாயாஸ்த்ராயபட்
(நான்கு பக்கமும் விரல்களால் சொடுக்கவும்)

என்று ஷடங்க ந்யாஸமும் செய்து பாராய ணத்தை ஆரம்பிக்க வேண்டியது.

இந்த ஸ்தோத்திரத்தை மூன்று தடவை திருப்பி திருப்பி ஜபிக்கவேணுமென்று 26–வது சுலோகத்தில் அகஸ்தியர் உபதேசிப்பதால், மூன்று தடவை திருப்பினால் ஒரு பாராயணம் பூர்த்தியாகுமென்று வெளிப்படுகிறது.

பாராயணம் முடிந்த பிறகு, ஆதித்யதேவனை நாமாவளிகளால் அர்சனை செய்து, முன்போல் உபசாரங்களால் பூஜித்து கற்பூர நீராஜனம் செய்து நமஸ்கரிக்கவேணும்.

கடைசியிலும் மூன்று தடவை ஆசமனம் செய்த பிறகு புஷ்பம் அக்ஷதை முதலிய ஸூர்ய தேவ பிரஸாதங்களை தரிக்கவேணும்.

தீர்த்தம் நிறைந்த கும்பத்தில் ஸூர்ய தேவதையை ஆவாஹனம் செய்து பூஜித்து மேற்கண்ட பாராயணம் செய்துமுடித்து தீர்த்தத்தை ப்ரோக்ஷ

ணம் செய்துகொள்ளுவதும் சிலசிஷ்டர்களுடைய அஷ்டானத்தில் இருக்கிறது.

வேறு விசேஷமும் உண்டு. அதாவது;

ஸூர்ய நமஸ்காரத்தில் செய்வதுபோல், ஒவ்வொரு சுலோக முடிவிலும் ஸூர்ய பகவானை ஸாஷ்டாங்கமாக நமஸ்கரிப்பது.

இப்படிச் செய்வதாக இருந்தால் ஸூர்யபகவானுக்கு அபிமுகமாக நின்றுகொண்டபடியே 5-வது சுலோகம் முடிய ஜபித்துவிட்டு, 6-வது சுலோகம் முதல் ஒவ்வொரு சுலோகமாக ஜபித்து அந்தந்த சுலோக முடிவில் நமஸ்கரிக்கவேணும். இந்தமாதிரி 24-வது சுலோகம் முடிய உள்ள 19 சுலோகங்களையும் ,சொல்லி 19 நமஸ்காரம் செய்துவிட்டு 25-வது முதல் பாக்கியுள்ள சுலோகங்களையும் நின்றுகொண்டே ஜபித்து முடிக்கவேணும். இம்மாதிரி மூன்று தடவை திருப்பித் திருப்பி செய்யவேணும்.

ஜபம் செய்யும்படியே விதிக்கப்பட்டிருந்தாலும் அந்த ஜபம் நமஸ்கார பூர்வகமாக இருப்பது விசேஷமென்று சில பெரியோர்கள் நினைத்து அனுஷ்டிக்கிறார்கள்.

சுபம்

|| श्रीरस्तु ||

श्री रामचन्द्रपरब्रह्मणेनमः

श्रीमद्युद्धकाण्डे

|| आदित्यहृदय स्तोत्रम् ||

ஆதித்யஹ்ருதய ஸ்தோத்ரம்.

(ஸ்ரீ ராமாயணம் யுத்தகாண்டம்
107-வது ஸர்க்கம்.)

ततो युद्धपरिश्रान्तं समरे चिन्तया स्थितम् ।
रावणं चाग्रतो दृष्ट्वा युद्धाय समुपस्थितम् ॥ १ ॥
दैवतैश्च समागम्य द्रष्टुमभ्यागतोरणम् ।
उपागम्याब्रवीद्राममगस्त्यो भगवानृषिः ॥ २ ॥

ததோ யுத்தபரிச்ராந்தம் ஸமேரே சிந்தயா ஸ்திதம் I
ராவணம் ச அக்ரதோ த்ருஷ்ட்வா யுத்தாய ஸமுப
ஸ்திதம் II

தைவதைச்ச ஸமாகம்ய த்ரஷ்டுமப்யாகதோ ரணம் ।
உபாகம்ய அப்ரவீத் ராமம் அகஸ்த்யோ பகவான்
ரிஷி: ॥

[ராம-ராவணயுத்தம் தீவ்ரமாக நடக்கையில். ராவணனுடைய அஸ்திர, சஸ்திரங்களும் பலமும் பயனற்றுப்போய் அவனுக்கு அபாயம் நேரிடுமென் பதை அறிந்த ராவணன் தேரோட்டியானவன் தனது தேரை ராமன் எதிரிலிருந்து பின்வாங்கச் செய்தான். இந்த அவமானத்தை ஸஹியாத ராவணன் தேரோட்டியைக் கண்டிக்கவே, அவன் மீண்டும்தேரைத் திருப்பி ஸ்ரீராமன் முன்பாகக் கொண்டுவந்து நிறுத்தினான்.]

இந்த ஸந்தர்ப்பத்தில் ஸ்ரீராகவன், யுத்தத்தில் சிறிது களைப்புற்றவர் போலவும், ராவணனை வ்தம் செய்வதற்கான உபாயமென்னவென்பதை சிந்திப் பவர்போலும் தோன்றியபோது, யுத்தவேடிக்கை பார்க்க தேவர்களுடன் வந்திருந்த பகவான் அகஸ்த்ய ரிஷி ஸ்ரீராமன் ஸமீபம் வந்து சொல்லலானார்.

(1-2)

[இங்கு ஸ்ரீராமன் யுத்தத்தில் களைப்புற்ற வராகத்தோன்றுவது ஒரு பாவனைத்தான். உண்மையாகக் களைப்புறவில்லை. அந்த மாதிரி பாவித்ததும் உலக க்ஷேமார்த்தமாக, இந்த "ஆதித்ய ஹ்ருதய" ஸ்தோத்ரத்தை அகஸ்தியர் மூலம் வெளிப்படுத்தவேணுமென்கிற நோக்கம் கொண்டு தானென்று திலக வ்யாக்யானம் கூறுகிறது.

ஸ்ரீகோவிந்த ராஜரோவெனில் "யுத்த பரிச்ராந்தம்" என்பதை ராவணனுக்கு விசேஷணமாக்கி களைப்புற்றவன் ராவணனே என்று அர்த்தம் செய்கிறார்.]

राम राम महाबाहो शृणु गुह्यं सनातनम् ।
येन सर्वानरीन् वत्स समरे विजयिष्यसि ॥ ३ ॥

ராம! ராம! மஹாபாஹோ! ச்ருணு குஹ்யம் ஸநாதனம் I
யேந ஸர்வாந் அரீந் வத்ஸ! ஸமரே விஜயிஷ்யஸி II

மஹா பாஹுவான ஏ! ராமா! ஏ! குழந்தாய்! நீ எந்த ஸ்தோத்திரத்தினால் யுத்தத்தில் எல்லா

சத்ருக்களேயும் ஜயித்து வெற்றிபெற முடியுமோ, அத்தகைய, ரஹஸ்யமானதும், வேதம்போல் அநாதியாக நித்யமாயிருப்பதுமான ஸ்தோத்திரத்தை உபதேசிக்கிறேன். கேளாய்!

[இங்கு ராம-ராம என்று இரட்டித்து அகஸ்திய முனிவர் கூறியதானது ஸந்தர்ப்பத்தின் அவஸரத்தையும், ஆதரவையும் முன்னிட்டேயாம், ஸந்தோஷம், பயம், அவஸரம் முதலிய ஸந்தர்ப்பங்களில் இரட்டித்துக்கூறுவது உலக வழக்கத்தில் ஸாதாரணமானது.

ஸநாதந— என்று சொல்லுவதால் ஆதித்ய ஹிருதய ஸ்தோத்திரமானது அகஸ்திய முனிவரால் செய்யப்பட்டதென்கிற சங்கை அகற்றபெற்று, அவருக்கு முன்பே வெகுகாலமாக இது பிரசாரத்தில் இருந்துவருகிறதென்பது விளக்கப்பட்டது.]

आदित्यहृदयं पुण्यं सर्वशत्रुविनाशनम् ।
जयावहं जपेन्नित्यमक्षय्यं परमं शिवम् ॥ ४ ॥

ஆதித்யஹ்ருதயம் புண்யம் ஸர்வசத்ரு விநாசனம் ।
ஜயாவஹம் ஜபேத் நித்யம் அக்ஷய்யம் பரமம் ஶிவம் ॥

இந்த ஆதித்ய ஹ்ருதயம் என்கிற ஸ்தோத்திரமானது, படிப்பவர்களுக்கும், கேட்பவர்களும் புண்யத்தைக் கொடுக்கும், எல்லாவித சத்ருக்களையும் நாசம் செய்யக்கூடியது, ஜயத்தைக் கொடுக்க வல்லது, குன்ருத பயனைக் கொடுக்கும். மிகவும் பரிசுத்தமானது. ஆகையால் இதை நித்யமாக ஜபிக்கவேணும்.

सर्वमङ्गलमाङ्गल्यं सर्वपापप्रणाशनम् ।
चिन्ताशोकप्रशमनमायुर्वर्द्धनमुत्तमम् ॥ ५ ॥

ஸர்வ மங்கள மாங்கல்யம் ஸர்வபாப ப்ரணாஶநம் 1
சிந்தாசோக ப்ரசமனம் ஆயுர்வர்த்தனம் உத்தமம் 11

மேலும் இந்த ஆதித்யஹ்ருதய ஸ்தோத்திரமானது எல்லா மங்களங்களுக்கும் மேற்பட்ட மங்களமாயிருக்கிறது. ஸகல விதமான பாபத்தையும் நசிக்கச்செய்கிறது. சிந்தை, சோகம் என்கிற மனோவ்யாதி முதலியவைகளை சமனம் செய்கிறது. ஆயுளை விருத்திசெய்யக்கூடியது. மஹா உத்தமமான ஸ்தோத்திரம்.

[இங்கு "ஆதித்ய ஹ்ருதயம்" என்றதின் பொருள் விவரிக்கப்படுகிறது. ஆதித்யனென்றால் ஸூர்யன், அவனுடைய ஹிருதயமென்பது ஸூர்ய மண்டலத்தின் மத்தியிலிருக்கும் பகவானையே குறிக்கிறது.

உபநிஷத்துக்களில்

"य एषोऽन्तरादित्ये हिरण्मय. पुरुषोद्दश्यते: "

"य आदित्ये तिष्ठन् यआदित्यमन्तरो यमयति "

"अन्तरादित्ये मनसाचरन्तम् "

இத்யாதி வாக்யங்களால் ஸூர்யமண்டல மத்தியில் பரமபுருஷனான பகவான் விளங்குவது உத்கோஷிக்கப்படுகிறது.

ध्येयस्सदासवितृमण्डल मध्यवर्तीनारायण:

என்றும் பிரமாணங்கள் சொல்லும் பிரகாரம் ஸூர்யமண்டல மத்யவாஸியான பகவானே "ஆதித்ய ஹிருதயன்" என்ற பதத்தால் குறிப்பிடப்படுவதால் ஸூர்யன் பெயரால் உலகத்தை இயக்கிவைக்கும் உபநிஷத் பிரதிபாத்யமான பரம்

பொருளே இந்த ஸ்தோத்திரத்திற்கு இலக்கானவ னென்று வியாக்யாதாக்கள் விளக்கியுள்ளார்கள்.]

रश्मिमन्तं समुद्यन्तं देवासुरनमस्कृतम् ।
पूजयस्व विवस्वन्तं भास्करं भुवनेश्वरम् ॥ ६ ॥

ரஸ்மிமந்தம் ஸமுத்யந்தம் தேவாஸுர நமஸ்க்ருதம் ।
பூஜயஸ்வ விவஸ்வந்தம் பாஸ்கரம் புவனேஸ்வரம் ॥

ஸ்வர்ண மயமான கிரணங்களுடன் கூடியவனும், நன்ருக உதயமாகி விளங்குபவனும், தேவர்களாலும், அஸுரர்களாலும் கூட நமஸ்கரிக்கப் படுகிறவனும், விசேஷ தேஜஸ்ஸுடன் விளங்குகிறவனும், அல்லது மற்ற தேஜஸ் சக்திகளை தன் தேஜஸ்ஸால் மறைப்பவனும், சந்திரன், அக்னி முதலியவர்களுக்கும் ஒளியளிப்பவனும், பதிநான்கு உலோகங்களும் ஈச்வரனுமாகிய ஆதித்ய ஹிருதய ஸ்தோத்திரத்தினுல் பூஜிப்பாயாக.

[இங்கு "ஸமுத்யந்தம்" என்ற பதத்திற்கு "உதயமாகிக்கொண்டிருப்பவன்" என்ற அர்த்தம் கொண்டு. அகஸ்தியர் ஆதித்ய ஹ்ருதய உபதேசம்

செய்தது காலை நேரத்தில் என்று தீர்த்தியம், திலகம், இரண்டு வியாக்யானங்களும் கூறுகின்றன.

கோவிந்தராஜரோ வென்ருல் அகஸ்தியர் ராமனிடம் வந்து உபதேசித்தது மாலை நேரம்தான் என்கிருர். இதற்கு கீழ்க்கண்ட லக்ஷ்மண வாக்யத்தை ஆதாரமாகக் காட்டுகிருர்.

அதாவது

"ஸூர்யன் அஸ்தமனத்தை அடைவதற்குள்ளாகவே இந்த துராத்மாவை வதம் செய்துவிட வேணும்"

என்று ஸ்ரீராமனிடம் லக்ஷ்மணன் சொல்லியதாகும்.]

सर्वदेवात्मको ह्येष रश्मिभावनः ।
एष देवासुरगणान् लोकान् पाति गभस्तिभिः ॥

ஸர்வ தேவாத்மகோ ஹி ஏஷ: தேஜஸ்வீ ரஶ்மிபாவந:
ஏஷ தேவாஸுரகணாந் லோகாந் பாதி கபஸ்திபி: ll

இவர் ஸகல தேவதைகளுக்கும் ஆத்மவாக இருக்கிருர். மஹா தேஜஸ் பொருந்தியவர், தனது கிரணங்களால் உலகத்தை ரக்ஷிப்பவர். இவர்

தேவர்கள் அஸுரர் என்ற வித்யாஸமின்றி எல்லோரையும் தமது கிரணங்களால் காப்பாற்றுகிறார்.

[இந்த ஸ்தோத்திர தேவதையான பகவான் எல்லா தேவர்களுக்கும் ஆத்மாவாக இருப்பவரென்று இங்கு சொல்லப்படுவதால் இந்த ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்திரத்தினால் எல்லா தேவதைகளையும் ஸ்துதி செய்ததாகும். ஸூர்யன் தனது கிரணங்களால் மழையை உண்டுபண்ணி அதன் மூலம் உலகத்தையே காப்பாற்றுவதாக வேதத்தில் சொல்லப்படுவதையே இங்கும் குறிப்பிட்டது]

एष ब्रह्मा च विष्णुश्च शिवः स्कन्दः प्रजापतिः ।
महेन्द्रो धनदः कालो यमः सोमो ह्यपांपतिः ॥

ஏஷ: ப்ரம்ஹா ச விஷ்ணு: ச ஶிவ: ஸ்கந்த:
ப்ரஜாபதி: I
மஹேந்த்ரோ: தனத: கால: யம: ஸோமோ ஹ்ய
பாம்பதி: II

இவரே ஸிருஷ்டி கர்த்தாவான சதுர்முக பிரம்ஹா. ஸிருஷ்டிக்கப்பட்ட பிரஜைகளைக் காத்து அருளும் விஷ்ணு பகவானும் இவரே. ஸம்ஹார கர்த்தாவான பரமேச்வரனும் இவர்தான். தேவ ஸேனுபதியான ஷண்முகக் கடவுளும் இவரே. பிரஜாபதி என்று கூறப்படுகிற ஒன்பது தேவர்களும் இவர்தான். இந்திரன், குபேரன், ம்ருத்யு, யமன், சந்திரன், வருணன் என்ற தேவர்களும் இவரேதான்.

पितरो वसवः साध्या ह्यश्विनौ मरुतो मनुः ।
वायुर्वह्निः प्रजा प्राणः ऋतुकर्ता प्रभाकरः ॥ ९ ॥

பிதர: வஸவ: ஸாத்யாஹ்யஸ்விநேள மருதோ மனு: ।
வாயு: வஹ்நி: ப்ரஜாப்ராண: ருதுகர்த்தா பிரபாகர: ॥

பித்ரு தேவர்களும் இவர்தான். எட்டுவிதமான வஸுதேவதைகளும் இவரே. பிரம்ஹத்தின் முகத்திலிருந்து உண்டாகி மந்த்ரமயமான சரீரத்துடன் விளங்கும் "ஸாத்யர்" என்ற பன்னிரண்டு தேவதைகளும் இவரே. அச்வநீ

தேவதைகள், ஆபத்தைத் தடுக்கும் சக்தி பொருந்திய 49 மருத் கணங்கள், மனு, பூலோக ஸஞ்சாரியான வாயு, அக்நி, பிரஜைகளின் சரீரத்திலுள்ள பிராண தேவதை, வஸந்தம், க்ரீஷ்மம் முதலிய ஆறு ருதுக்களை உண்டுபண்ணும் தேவர், உயர்ந்த அறிவு ஒளியைக் கொடுக்கும் தெய்வம் ஆகிய எல்லோரும் இவர்தான்.

எட்டு வஸுதேவர்களாவன :—

ध्रुवो धरस्तथा सोमः आपो वैश्वानरोऽनिलः ।
प्रत्यूषश्च प्रभावश्च वसवोऽष्टौ प्रकीर्तिताः ॥

आदित्यः सविता सूर्यः खगः पूषा गभस्तिमान् ।
सुवर्णसदृशो भानुर्हिरण्यरेता दिवाकरः ॥ १० ॥

ஆதித்ய: ஸவிதா ஸூர்ய: கக: பூஷா கபஸ்திமாந் 1
ஸுவர்ணஸத்ருசோ பானு: ஹிரண்யரேதா: திவாகர:

(ஸூர்யமண்டல மத்யவாஸியான ஹே! பகவந்!) நீர் அதிதி தேவியின் புத்ரராக விளங்குகிறீர், பிராணிகளைத் தங்களது கார்யங்களில் பிரேரணை செய்பவர். உலக க்ஷேமத்திற்காக ஆகாசத்தில்

ஸஞ்சரிக்கிறவர். வெய்யில், மழை முதலியவை களால் உலகத்திற்கு புஷ்டியைக் கொடுப்பவர். எல்லா திசைகளிலும் வியாபிக்கும் தேஜஸ்ஸுள் ளவர். அல்லது எங்கும் வியாபித்திருக்கும் மஹா லக்ஷ்மியுடன் கூடியவர். தங்கமயமான வர்ண முள்ளவர். ஜோதியுடன் விளங்குபவர். ஸ்வர்ண மயமான பிரம்மாண்டத்தை உத்பத்தி செய்யும் சக்தியுள்ளவர். அஜ்ஞானத்தைப் போக்கி ஞானத்தைக் கொடுப்பவர். அல்லது பகலை உத் பத்தி செய்பவர்.

[இங்கு "ஸுபர்ண: தபந:" என்ற பாடபேத முண்டு. அழகிய இரக்கையுள்ளவன் என்று அர்த் தம். "தாஸுபர்ண" என்ற சுருதியில் பரப்ரம் மத்தை "ஸுபர்ணம்" என்று வர்ணித்திருக்கிறது. தபந: என்றால், கிரணத்தால் ஜகத்தை தபிக்கச் செய்பவன் அல்லது ஸ்வபாவமாக ஸகல ஐச் வர்யம் பொருந்தியவன் என்று அர்த்தம்]

हरिदश्वः सहस्रार्चिः सप्तसप्तिर्मरीचिमान् ।
तिमिरोन्मथनः शंभुस्त्वष्टा मार्ताण्ड अंशुमान् ।११

ஹரிதஶ்வ: ஸஹஸ்ரார்ச்சி: ஸப்த ஸப்தி: மரீசிமாந் I
திமிரோந்மதந: சம்பு: த்வஷ்டா மார்த்தாண்ட
அம்சுமாந் II

ஏ! ஆதித்ய தேவனே! நீர் பச்சை நிறமுற்ற குதிரையுள்ளவர். அல்லது மனோஹரமான கருடனை வாஹனமாகப் பெற்றவர், அல்லது எல்லா திக்குகளிலும் வியாபிக்கும் சக்திபெற்றவர். ஆயிரம் கிரணங்களுள்ளவர். 'ஸப்த' என்ற பெயருள்ள குதிரையுள்ளவர். அல்லது ஏழுவிதமான பிராணன்களுக்கு உத்பத்தி ஸ்தானமாயுள்ளவர். பிரகாசமான கிரணமுள்ளவர். அல்லது சத்ருக்களை வதம் செய்யக்கூடிய சக்ராயுதம் தரிப்பவர். இருட்டையும், அக்ஞானத்தையும் த்வம்ஸம் செய்கிறவர். இஹபர ஸுகங்களுக்கு உத்பத்தி ஸ்தானமாயுள்ளவர். ஸம்ஹாரகர்த்தா. அல்லது பக்தர்களின் ஜனனமரண ரூபமான அனர்த்தங்களை நீக்குபவர். அண்டம் மறைந்தபின் மறுபடி ஸிருஷ்டிக்காக உண்டானவர். பிராணிகளின் உள்ளும், வெளியிலும் வியாபித்து நிற்பவர்.

हिरण्यगर्भः शिशिरस्तपनो भास्करो रविः ।
अग्निगर्भोऽदितेः पुत्रः शङ्खः शिशिरनाशनः ॥ १२

ஹிரண்யகர்ப்பஃ ஶிஶிரஃ தபநஃ பாஸ்கரஃ ரவிஃ ।
அக்நிகர்ப்பஃ அதிதேஃ புத்ரஃ ஶிஶிரஃ நாஶநஃ ॥

ஏ! ஆதித்யதேவனே! நீர், ஸுவர்ணமயமான பிர்மாண்டத்தின் மத்தில் இருப்பவர். உல்லது ஸகல ஜகத்தையும் உத்பத்தி செய்கிற ஜீவன்களை கர்ப்பத்தில் உடையவர். அல்லது மிகவும் ஹிதகர மான ஹிருதயமுள்ளவர். (ஸம்ஸார தாபத்தினால் வாடியவர்களுக்கு குளிர்ச்சியுண்டுபண்ணுபவர்) உலகத்தை கிரணத்தால் உஷ்ணப்படுத்துகிறவர். அல்லது உமது பக்தர்களின் விரோதிகளை தபிக்கச் செய்பவர். ஒளி வீசுபவர். அதாவது எல்லா வஸ் துக்களையும் பார்க்க யோக்யதை கொடுப்பவர். எல்லோராலும் ஸ்துதி செய்யப்படுகிறவர். அல்லது வேதங்களை உபதேசிப்பவர். பகலில் அக் நியை கர்ப்பத்தில் வஹிப்பவர். அல்லது காலாக்நி ரூபனானருத்ரனை கர்ப்பத்தில் உடையர். அதிதி தேவியின் புத்திரன். ஸாயங்காலத்தில் தானாகவே

யமனமடைகிறவர் அல்லது பரமானந்த ரூபியா யும், ஆகாசரூபியாயுமிருப்பவர். பனியையும். குளிரையும் நாசம் செய்கிறவர். அல்லது அக்ஞான மாகிற ஜாட்டியத்தை நீக்குபவர்.

व्योमनाथस्तमोभेदी ऋग्यजुस्सामपारगः ।
घनवृष्टिरपांमित्रो विन्ध्यवीथीः प्लवङ्गमः ॥ १३

வ்யோமநாத: தமோபேதீ ருக்யஜுஸ்ஸாம பாரக: ।
கநவ்ருஷ்டி: அபாம் மித்ர: விந்த்யவீதீப்லவங்கம: ॥

ஹே! ஆதித்ய தேவனே! நீர் ஆகாசத்திற்கு யஜமானன், ராஹுவை பேதிக்கும் சக்திபெற்ற வர். ருக், யஜுஸ், ஸாம என்கிற மூன்று வேதங் களுடைய கரையாகிற உபநிஷத்தில் பிரதிபாதிக் கப்படுகிறவர். நிறைந்த மழையை வர்ஷிப்பவர். ஜலங்களுக்கு மித்ரன். அதாவது ஜலத்தை உத் பத்தி செய்பவர். தக்ஷிணாயநத்தில் விந்தியமலை வழியாக ஸஞ்சரிப்பவர். வேகமான கதியுள்ளவர்.

[இங்கு 'ரிக் யஜுஸ்ஸாம பாரக:' என்பதால் ஸூர்யதேவன் மூன்று வேத ஸ்வரூபியென்ற மஹிமை வெளிப்படுத்தப்பட்டது. ஸூர்யன்

காலை நேரத்தில் ருக்வேதரூபியாகவும், மத்யான காலத்தில் யஜுர்வேத ரூபியாகவும் அஸ்தமன ஸமயத்தில் ஸமவேத ஸ்வரூபியாயுமிருப்பதாய் யஜுர் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ऋग्भिः पूर्वाह्णे दिवि देव ईयते । यजुर्वेदे तिष्ठति मध्ये अह्नः । सामवेदेनास्तमये महीयते । वेदैरशून्यः त्रिभिरेति सूर्यः ।

'கன விருஷ்டி' என்பதால் யாகங்களில் ஹோமம் செய்யப்படும் ஹவிஸ்ஸானது ஸூர்யனிடம் போவதாயும் ஸூர்ய பகவான் அந்த யாகாதி கர்மங்களால் பூஜிக்கப்பட்டு மழைபெய்ய செய்து அதிலிருந்து அன்னமும், அதிலிருந்து பிரஜைகளும் உண்டாகக் காரணமாகிறார் என்று சொல்லப்பட்டது]

अग्नौ प्रस्ताहुतिः सम्यक् आदित्यमुपतिष्ठते । आदित्या-ज्जायते वृष्टिः वृष्टेरन्नं ततः प्रजाः ॥

விந்த்யவிதீ ப்லவங்கம். என்று ஓரே பதமான பாடத்திலும் ஆகாச மார்க்கத்தில் வேகமாக ஸஞ்சரிப்பவர் என்று அர்த்தம்.

आतपी मण्डली मृत्युः पिङ्गलस्सर्वतापनः ।
कविर्विश्वो महातेजाः रक्तः सर्वभवोद्भवः ॥

ஆதபீ மண்டலீ ம்ருத்யுः பிங்கள ஸர்வ தாபநः 1
கவிः விஸ்வோ மஹாதேஜாः ரக்தः ஸர்வபவோத்பவः 11

ஹே! ஆதித்ய தேவரே! நீர் வெய்யில் ரூபியாயிருக்கிறீர். அல்லது உலக ஸிருஷ்டியாகிற சிறந்த தபஸ் உள்ளவர். சக்ரமான மண்டலமுள்ளவர். அல்லது கௌஸ்துபாதிகளான அலங்காரங்களுடன் விளங்குகிறீர். விரோதிகளைக்கொல்லுகிறவர். உதயகாலத்தில் சிவந்த வர்ணத்துடன் விளங்குபவர். ஸம்ஹார கர்த்தாவாயிருப்பவர். வியாகரணம் முதலிய ஸகல சாஸ்திரங்களைச் செய்த ஸர்வஜ்ஞனான வித்வான். உலகத்தை நிர்வாஹம் செய்கிறவர் மஹாதேஸ்வீ, பிராணிகளிடம் பிரீதியுள்ளவர். உலகத்திற்கு அவச்யமான ஸகல கார்யங்களையும் உத்பத்தி செய்பவர்.

नक्षत्रग्रहताराणामधिपो विश्वभावनः ।
तेजसामपि तेजस्वी द्वादशात्मन्नमोऽस्तु ते । १५

நக்ஷத்ரக்ரஹ தாராணும் அதிப : விஸ்வபாவந : ll
தேஜஸாமபி தேஜஸ்வீ த்வாதசாத்மன்
நமோஸ்து தே ll

ஏ! ஆதித்யதேவனே! நீர் நக்ஷத்திரங்கள், நவக்கிரஹங்கள் : தாரகைகள் இவைகளுக்கும் அதிபதி, உலகத்தை ஸ்தாபித்தவர். அக்நி முதலிய தேஜஸுகளுக்கும் ஒளியளித்து விளங்குபவர். பன்னிரண்டு விதமான மூர்த்தியுள்ள ஹே! ஆதித்யனே! உமக்கு நமஸ்காரம்.

[ஸூர்யதேவதையை "த்வாதசாதித்யர்கள் என்று பன்னிரண்டு வித மூர்த்தியுள்ளவராக வேதங்கள் சொல்லுகின்றதையே இங்கு த்வாதசாத்மந்" என்பதால் சொல்லப்பட்டது. பன்னிரண்டு பெயர்களாவன:—

இந்திர: தாதா பக: பூஷா மித்ர: ச வருண:
ஆர்யமா: l
அர்ச்சி: விவஸ்மான் த்வஷ்டா ச ஸவிதா,
விஷ்ணுரேவது ll

'த்வாத சாத்மன்' என்பதற்கு பன்னிரண்டு மாத ஸ்வரூபமாயிப்பவரென்கிற அர்த்தமும் உண்டு.]

नमः पूर्वाय गिरये पश्चिमायाद्रये नमः ।
ज्योतिर्गणानां पतये दिनाधिपतये नमः ॥ १६ ॥

நம: பூர்வாய கிரயே பஸ்சிமாய அத்ரயே நம:
ஜ்யோதிர்கணாநாம் பதயே திநாதி பதயே நம: 11

கிழக்கு திக்கில் உள்ள உதய பர்வத தேவனான உமக்கு நமஸ்காரம். மேற்கு திசையில் அஸ்தமன பர்வத தேவதையான உமக்கு நமஸ்காரம். சந்திரன், அக்னி, நக்ஷத்திரங்கள், போன்ற ஜோதிஸ்களுக்கு அதிபனும், பகலுக்குப் பதியுமான உமக்கு நமஸ்காரம்.

[இந்த ஸ்தோத்திரத்தில் பல விடங்களில் 'புனருக்தி' (சொல்லியதையே திருப்பிச் சொல்லுவது) காணப்படினும் அது ஸ்துதியாகையால் தோஷமாகதென்று கருத்து.]

जयाय जयभद्राय हर्यश्वाय नमो नमः ।
नमो नमः सहस्रांशो आदित्याय नमो नमः । १७

ஜயாய ஜயபத்ராய ஹர்யச்வாய நமோ நம: 1
நமோ நம: ஸஹஸ்ராம்ஸோ ஆதித்யாய நமோ நம: 11

ஸூர்ய உபாஸனம் செய்பவர்களுக்கு இஷ்டமான ஜயத்தைக் கொடுப்பவரும், மங்களத்தை கொடுப்பவரும், பச்சைக்குதிரையுள்ளவரும், ஆயிரம் கிரணங்களுள்ளவருவன ஆதித்யரூபியான உமக்கு அநேக நமஸ்காரம்.

[இங்கு ஜயாய, 'ஜயபத்ராய' இரண்டிற்கும் ஸ்ரீ வைகுண்டலோக த்வார பாலமூர்த்திகளென்ற அர்த்தமும் சொல்லப்படுகிறது.

நமோ நம: என்று அடிக்கடி இரட்டித்துக் ஏற்கனவே சொல்லியது போல் மிகுந்த ஆதரவு காட்டும் தன்மையுள்ளது]

नम उग्राय वीराय सारङ्गाय नमो नमः ।
नमः पद्मप्रबोधाय प्रचण्डाय नमोऽस्तु ते ॥ १८ ॥

நம உக்ராய வீராய ஸாரங்காய நமோ நம:
நம: பத்ம ப்ரபோதாய ப்ரசண்டாய நமோஸ்து தே ||

ஸூர்யனை உபாஸிக்காதவர்களுக்கு உக்ரனுகவும், மஹா பலமுள்ளவனும், அரை நிமிஷத்தில் இரண்டாயிரம் யோஜனை தூரம் தாண்டக்

கூடியவரென்று சொல்லுகிறபடி வேகத்துடன் ஸஞ்சரிப்பவனும், தாமரைப்பூவையும், யோகிகளின் ஹிருதய கமலத்தையும் மலரச் செய்கிறவனும் துஷ்டர்களிடம் அதிக கோபம் காட்டுகிறவனுமான உமக்கு நமஸ்காரம்

ब्रह्मेशानाच्युदेशाय सूर्यायादित्यवर्चसे ।
भास्वते सर्वभक्षाय रौद्राय वपुषे नमः ॥ १९ ॥

பிரம்ஹேஸாநாச்யுதேசாய ஸூர்யாய ஆதித்ய வர்ச்சஸே
பாஸ்வதே ஸர்வபக்ஷாய ரௌத்ராய வபுஷே நம: 1

பிரம்ஹா, சிவன், அச்யுதன், இவர்களுக்கு அதிபதியாகவும் ஆதித்யனைப்போன்ற காந்தியுள்ளவனும், மிகுந்த பிரகாசமுள்ளவனும், பிரளய காலத்தில் எல்லாவற்றையும் ஸம்ஹரிப்பவனும், அல்லது ஸகல யஜ்ஞங்களுடைய ஹவிர்பாகத்தை புஜிப்பவனும், சத்ரு ஸம்ஹாரார்த்தமாக உக்ரமான சரீரமுள்ளவராயுமிருக்கிற ஸூர்யனை நமஸ்கரிக்கிறேன்.

ஸூர்யாய, என்பதற்கு "ஸூராய" என்ற பாட பேதமுண்டு. அர்த்தம் ஒன்று தான்.

तमोघ्नाय हिमघ्नाय शत्रुघ्नायामितात्मने ।
कृतघ्नघ्नाय देवाय ज्योतिषां पतये नमः ॥ २० ॥

தமோக்நாய ஹிமக்நாய சத்ருக்நாய அமிதாத்மநே ।
க்ருதக்நக்நாய தேவாய ஜ்யோதிஷாம் பதயே நம: ॥

இருளை நசிக்கச் செய்கிறவரும், பனியை த்வம்ஸம் செய்கிறவரும், சத்ருக்களைக்கொல்லுகிறவரும் க்ருதக்நர்களை நாசம் செய்கிறவரும், ஸ்வயம் பிரகாச வஸ்துவாயும், தேஜஸ்ஸுகளுக்கு அதிபதியாயுமுள்ள ஸூர்யதேவனை நமஸ்கரிக்கிறேன்.

तप्तचामीकराभाय वह्नये विश्वकर्मणे ।
नमस्तमोभिनिघ्नाय रुचये लोकसाक्षिणे ॥ २१ ॥

தப்த சாமீ கராபாய வஹ்நயே விச்வகர்மணே ।
நமஸ்தமோபிநிக்நாய ருசயே லோகஸாக்ஷிணே ॥

உருக்கிய தங்கம் போன்ற காந்தியுள்ளவரும் அக்நி ஸ்வரூபரும், உலக கார்யங்களெல்லா

வற்றையும் செய்துவைப்பவரும். இருட்டைப் போக்கிறவரும் பிரகாசிப்பவரும், ஜனங்களுடைய நற்காரியங்கள், கெட்டகாரியங்களுக்கு ஸாக்ஷியாயிருப்பவருமான ஸூர்யதேவனுக்கு நமஸ்காரம் செய்கிறேன்.

[இங்கு "ருசயே" என்பதற்கு "க்ருணயே" என்று பாட பேதமுண்டு. அர்த்தம் ஒன்றே.]

"ஸர்வதேவாத்மகோஹ்யேஷ:"

என்ற ஏழாவது சுலோகம் ஆரம்பித்து "லோகஸாக்ஷிணே" என்று முடியும் 21-வது சுலோகம் வரையில் 108 ஆதித்யஹ்ருதய ஸ்தோத்திர நாமாவளி என்று மஹேச்வர தீர்த்தீய வ்யாக்யாநத்தில் சொல்லப்படுகிறது. திலக வ்யாக்யானத்திலோவென்றால் ஷ நாமாவளியானது 125 என்று நிச்சயித்து 4-வது சுலோகமாகிய "ரஸ்மிமந்தம்"

என்றதும் முதல் ஆரம்பித்து "ஸர்வஏஷரவி: ப்ரபு" என்ற 24-வது சுலோகம் வரையில் கணக்கிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது.]

नाशयत्येष वै भूतं तदेव सृजति प्रभुः ।
पायत्येप तपत्येष वर्षत्येष गभस्तिभिः ॥ २२ ॥

நாஶயத்யேஷ வைபூதம் ததேவ ஸ்ருஜதிப்ரபு: I
பாயத்யேஷ: தபத்யேஷ: வர்ஷத்யேஷ: கபஸ்திபி: II

இந்த ஸூர்யதேவர் மஹா பிரளயகாலத்தில் பிராணிகளை நாசம் செய்கிறார். அவைகளையே மறுபடி ஸிருஷ்டிக்கிறார் இந்த பிரபு. இவர் தமது கிரணங்களால் ஜலத்தை ஶோஷிக்கச் செய்கிறார். தமது கிரணங்களால் தாபம்உண்டுபண்ணுகிறார். அக்கிரணங்களாலேயே மழை பெய்யச் செய்கிறார்.

एष सुप्तेषु जागर्ति भूतेषु परिनिष्ठितः ।
एष एवाग्निहोत्रं च फलं चैवाग्निहोत्रिणाम् ॥२३॥

ஏஷ: ஸுப்தேஷு ஜாகர்த்தி பூதேஷு பரிநிஷ்டித: I
ஏஷ: ஏவ அக்னிஹோத்ரம்ச பலம் சைவ அக்னி
ஹோத்ரிணும் II

இந்த ஸூர்யபகவான், பிராணிகள் தூங்கும்போது அவர்களுக்குள் அந்தர்யாமியாக இருந்து கொண்டு ஜாக்ரதையாக விழித்துக்கொண்டிருக்கிறார். இவரே அக்நிஹோத்ரமென்ற ஸ்வரூபியா

யிருக்கிறார். அக்நிஹோத்ர யாகம் செய்கிறவர்களுக்கு, அந்த யாக பலனாக இவரே அடையக் கூடியவராயிருக்கிறார்.

वेदाश्च क्रतवश्चैव क्रतूनां फलमेव च ।
यानि कृत्यानि लोकेषु सर्व एष रविः प्रभुः ॥ २४

வேதாஶ்ச க்ரதவஶ்சைவ க்ரதூநாம் பலமேவச 1
யாநி க்ருத்யாநி லோகேஷு ஸர்வ: ஏஷ: ரவி ப்ரபு: 11

ருக் யஜுஸ், ஸாம முதலான வேதங்களும் அந்த வேதங்களில் விதிக்கப்பட்ட அக்நிஷ்டோமாதி யாகங்களும் அந்த யாகங்களின் பலனான ஸ்வர்க்கம், மோக்ஷம் முதலியவைகளும் இது போல் உலகில் எவ்வளவு லௌகிககர்மாக்கள் உண்டோ அவைகளும் எல்லாம் இந்த பிரபுவான ஸூர்யபகவானுடைய ஸ்வரூபம் தான்.

[வேதா:, என்பதற்கு தேவா: என்ற பாடபேதம் திலகத்தில் அங்கீகரிக்கப்பட்டு. "யாக தேவதைகள்" என்று அர்த்தம். செய்யப்பட்டிருக்கிறது.]

एनमापत्सु कृच्छ्रेषु कान्तारेषु भयेषु च ।
कीर्तयन् पुरुषः कश्चिन्नावसीदति राघव ॥ २५॥

ஏநமாபத்ஸு க்ருச்ரேஷு காந்தாரேஷு பயேஷு ச।
கீர்த்தயன் புருஷ: கஸ்சித் நாவஸீததி ராகவ ॥

[இதுவரையில் ஆதித்யஹ்ருதய மந்திரங்களை உபதேசித்துவிட்டு, அந்த ஸ்தோத்திரத்தின் பலனை இரண்டு சுலோகங்களால் அகஸ்திய பகவான் சொல்லுகிறார்]

ஏ! ராகவ! இந்த ஆதித்யஹிருதயத்தை எந்த மனிதனும், தனக்கு ஏற்பட்ட ஆபத்காலங்களில் அதாவது அகால ம்ருத்யு போன்றவை தோன்றக் கூடுமென்ற நிலைமையிலும், ஜ்வரம் போன்ற வியாதிகள், திரவிய நஷ்டம் ஏற்படும்போதும், பிரயாண காலங்களில் காடு முதலிய வழிகளில் ஏற்படும் துன்ப காலத்திலும், திருடர் முதலிய துஷ்டர்களுடைய பயமேற்படும் காலத்திலும், ஜபம் செய்தால் மேற்கண்ட கஷ்டங்களை அடைய மாட்டான்.

இங்கு ஏநம், என்பதற்கு "ஏதத்" என்ற பாடபேதம் திலகத்தில் காணப்படுகிறது. "இந்த ஆதித்யஹிருதய ஸ்தோத்திரத்தை" என்று அர்த்தம். எந்த மனிதனும், என்று சொல்லப்பட்டிருப்பதால், இந்த ஸ்தோத்ரத்தைப் பாராயணம் செய்ய எல்லாருக்கும் அதிகாரமுண்டென்று கோவிந்தராஜீயம் கூறுகிறது.

पूजयस्वैनमेकाग्रो देवदेवं जगत्पतिम् ।
एतत्त्रिगुणितं जप्त्वा युद्धेषु विजयिष्यसि ॥ २६ ॥

பூஜயஸ்வ ஏநம் ஏகாக்ர: தேவதேவம் ஜகத்பதிம் I
ஏதத் த்ரிகுணிதம் ஜப்த்வா யுத்தே௩ விஜயிஷ்யஸி II

ஏ! ராம! தேவர்களுக்கெல்லாம் தேவனையும் எல்லா ஜகத்துக்களுக்கும் அதிபதியுமான இந்த ஆதித்ய தேவனை ஏகாக்ர சித்தமுள்ளவனாக பூஜிப்பாயாக.

இந்த ஸ்தோத்திரத்தை சேர்ந்தால் போல் மூன்று தடவை ஜபம் செய்து யுத்தத்தில் வெற்றி பெறுவாயாக.

இங்கு 'த்ரிகுணிதம் ஜபத்வா என்று சொல் லப்படுவதால் மூன்று தடவை இதை திருப்பி ஜபித்தால் தான் ஒரு பாராயணம் பூர்த்தியாகு மென்று அறியப்படுகிறது.

अस्मिन् क्षणे महाबाहो रावणं त्वं वधिष्यसि ।
एवमुक्त्वा तदागस्त्यो जगाम च यथागतम् ॥ २७

அஸ்மிந் க்ஷணே மஹாபாஹோ! ராவணம் த்வம் வதிஷ்யஸி ।
ஏவ முக்த்வா ததா அகஸ்த்ய: ஜகாம ச யதாகதம் ॥

மஹா பாஹுவான ஏ! ராம! இந்த ஸ்தோத் திரத்தை ஜபித்து இந்த க்ஷணத்திலேயே ராவ ணனை நீ ஸம்ஹாரம் செய்யப்போகிறாய். இவ்வாறு அகஸ்திய முனிவர் அப்போது சொல்லிவிட்டு வழியே திரும்பிச் சென்றார்.

एतच्छ्रुत्वा महातेजा नष्टशोकोऽभवत्तदा ।
धारयामास सुप्रीतो राघवः प्रयतात्मवान् ॥ २८॥

ஏதத் ச்ருத்வா மஹாதேஜா நஷ்டசோக: அபவத் ததா
தாரயாமாஸ ஸுப்ரீத: ராகவ: ப்ரயதாத்மவான் ॥

இவ்வாறு அகஸ்தியர் சொல்லியதைக்கேட்டு மஹா தேஜஸ்வியான ராகவன் அப்போது ராவண வத விஷயமான சிந்தை விலகியவரானார். மிகவும் ஸந்தோஷமடைந்தவராகி, பரிசுத்த ஆத்மாவாயிருந்துகொண்டு அந்த உபதேசத்தை மனதில் தரிக்கச் செய்துக் கொண்டார்.

आदित्यं प्रेक्ष्य जप्त्वा तु परं हर्षमवाप्तवान् ।
त्रिराचम्य शुचिर्भूत्वा धनुरादाय वीर्यवान् ॥ २९

ஆதித்யம் ப்ரேக்ஷ்ய ஜப்த்வா து பரம் ஹர்ஷம்வாப்த வான் 1
த்ரிராசம்ய ஶுசி: பூத்வா தனுராதாய வீர்யவான் 11

பிறகு ஸ்ரீ ராகவன், ஆதித்யனை பார்த்துக் கொண்டு, ஆதித்யஹ்ருதய ஸ்தோத்திரத்தை ஜபம்செய்து மிகுந்த ஸந்தோஷத்தை அடைந்தார். பின்பு மூன்று தடவை ஆசமனம் செய்துவிட்டு வீர்யவானன அவர் தனுஸ்ஸை எடுத்துக்கொண்டு

रावणं प्रेक्ष्य हृष्टात्मा युद्धाय समुपागमत् ।
सर्वयत्नेन महता वधे तस्य धृतोऽभवत् ॥ ३० ॥

ராவணம் ப்ரேக்ஷ்ய ஹ்ருஷ்டாத்மா யுத்தாய ஸமுபாக
தம் ।
ஸர்வ யத்நேந மஹதா வதே தஸ்ய த்ருதோऽபவத் ॥

ராவணனை நோக்கி ஸந்தோஷமுள்ளவராக யுத்தம் செய்ய வந்து நின்றார். பெரியதான எல்லா வித யத்நத்தினாலும் ராவணனுடைய வதத்தில் உறுதியுள்ளவரானார்.

अथ रविरवदन्निरीक्ष्य रामं
मुदितमनाः परमं प्रहृष्यमाणः ।
निशिचरपतिसंक्षयं विदित्वा
सुरगणमध्यगतो वचस्त्वरेति ॥ ३१ ॥

इति श्रीमद्रामायणे युद्धकाण्डे
सप्तोत्तर शततमः सर्गः ।

॥ आदित्यहृदय स्तोत्रम् संपूर्णम् ॥

அத ரவி: அவதத் நிரீக்ஷ்ய ராமம் முதிதமநா: பரமம்.
ப்ரஹ்ருஷ்யமான:1
நிஶிசரபதிஸம்க்ஷயம் விதித்வா ஸுரகண மத்யகதோ
வச: த்வரேதி 11

பிறகு ஸூர்யபகவான், தன்னை ஸ்தோத்திரம் செய்யும் ஸ்ரீராமனைப் பார்த்து, ஸந்தோஷமடைந்த மனதுள்ளவராய் மிகவும் புளகாங்கிதராகி, ராவணனுடைய நாசம் ஸமீபத்து விட்டதை அறிந்து தேவர்களின் கூட்டத்தின் மத்தியிலிருந்துகொண்ட, 'ராவண வதத்தில் சுறுசுறுப்புக் காட்டுவாயாக' என்று சொன்னார்.

ஸ்ரீ ராமாயணம் யுத்த காண்டம் 107வது ஸர்க்கம் முற்றிற்று.

ஆதித்ய ஹ்ருதய ஸ்த்தோத்திரம்
ஸம்பூர்ணம்

சுபமஸ்து.

॥ श्रीरस्तु ॥

॥ आदित्यहृदयस्तोत्रनामावलिः ॥

ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்ர நாமாவளி:

[இந்த நாமாவளியானது திலக வ்யாக்யானத்தை அனுஸரித்து 125 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது]

१ ॐ रश्मिमते नमः ।
ரச்மிமதே நம:

२ ,, समुद्यते नमः ।
ஸமுத்யதே நம:

३ ,, देवासुर नमस्कृताय नमः ।
தேவாஸுர நமஸ்க்ருதாய நம:

४ ॐ विवस्वते नमः ।
விவஸ்வதே நம:

५ ,, भास्कराय नमः ।
பாஸ்கராய நம:

६ ,, भुवनेश्वराय नमः ।
புவனேஸ்வராய நம:

७ ॐ सर्वदेवात्मकाय नमः ।
ஸர்வதேவாத்மகாய நம:

८ ,, तेजस्विने नमः ।
தேஜஸ்விநே நம:

९ ,, रश्मिभावनाय नमः ।
ரச்மிபாவனாய நம:

१० ,, देवासुरगणलोकपालाय नमः ।
தேவாஸுரகண லோகபாலாய நம:

११ ,, ब्रह्मणे नमः ।
ப்ரம்ஹணே நம:

१२ ,, विष्णवे नमः ।
விஷ்ணவே நம:

१३ ,, शिवाय नमः ।
சிவாய நம:

१४ ॐ स्कन्दाय नमः ।
ஸ்கந்தாய நம:

१५ ,, प्रजापतये नमः ।
ப்ரஜாபதயே நம:

१६ ,, महेन्द्राय नमः ।
மஹேந்த்திராய நம:

१७ ,, धनदाय नमः ।
தனதாய நம:

१८ ,, कालाय नमः ।
காலாய நம:

१९ ,, यमाय नमः ।
யமாய நம:

२० ,, सोमाय नमः ।
ஸோமாய நம:

२१ ॐ अपांपतये नमः ।

அபாம்பதயே நம:

२२ ,, पितृदेवतायै नमः ।

பித்ருதேவதாயை நம:

२३ ,, वसुमूर्तये नमः ।

வஸுமூர்த்தயே நம:

२४ ,, साध्यमूर्तये नमः ।

ஸாத்யமூர்த்தயே நம:

२५ ,, अश्विमूर्तये नमः ।

அச்விமூர்த்தயே நம:

२६ ,, मरुन्मूर्तये नमः ।

மருன்மூர்த்தயே நம:

२७ ,, मनवे नमः ।

மனவே நம:

२८ ॐ वायुमूर्तये नमः ।

வாயுமூர்த்தயே நம:

२९ ,, वह्नये नमः ।

வஹ்நயே நம:

३० ,, प्रजारूपाय नमः ।

ப்ரஜாருபாய நம:

३१ ,, प्राणाय नमः ।

ப்ராணாய நம:

३२ ,, ऋतुकर्त्रे नमः ।

ருதுகர்த்ரே நம:

३३ ,, प्रभाकराय नमः ।

ப்ரபாகராய நம:

३४ ,, आदित्याय नमः ।

ஆதித்யாய நம:

३५ ॐ सवित्रे नमः ।
ஸவித்ரே நம:

३६ ,, सूर्याय नमः ।
ஸூர்யாய நம:

३७ ,, खगाय नमः ।
ககாய நம:

३८ ,, पूष्णे नमः ।
பூஷ்ணே நம:

३९ ,, गभस्तिमते नमः ।
கபஸ்திமதே நம:

४० ,, सुवर्णसदृशाय: ।
ஸுவர்ணஸத்ரு
ஶாய நம:

४१ ,, भानवे नमः ।
பானவே நம:

४२ ॐ हिरण्यरेतसे नमः ।
ஹிரண்யரேதஸே நம:

४३ ,, दिवाकराय नमः ।
திவாகராய நம:

४४ ,, हरिदश्वाय नमः ।
ஹரிதச்வாய நம:

४५ ,, सहस्रार्चिषे नमः ।
ஸஹஸ்ரார்ச்சிஷே நம:

४६ ,, सप्तसप्तये नमः ।
ஸப்தஸப்தயே நம:

४७ ,, मरीचिमते नमः ।
மரீசிமதே நம:

४८ ,, तिमिरोन्मथनाय नमः ।
திமிரோன்மதனாய நம:

४९ ॐ शंभवे नमः ।

சம்பவே நம:

५० ,, त्वष्ट्रे नमः ।

த்வஷ்டரே நம:

५१ ,, मार्ताण्डाय नमः ।

மார்த்தாண்டாயநம:

५२ ,, अम्शुमते नमः ।

அம்சுமதே நம:

५३ ,, हिरण्यगर्भाय नमः ।

ஹிரண்யகர்பாயநம:

५४ ,, शिशिराय नमः ।

ஶிஶிராய நம:

५५ ,, तपनाय नमः ।

தபனாய நம:

५६ ॐ भास्कराय नमः ।

பாஸ்கராய நம:

(अहस्कराय नमः)

(அஹஸ்கராய நம:)

५७ ,, रवये नमः ।

ரவயே நம:

५८ ,, अग्निगर्भाय नमः ।

அக்னிகர்பாய நம:

५९ ,, अदितेःपुत्राय नमः ।

அதிதே:புத்ராய நம:

६० ,, शङ्खाय नमः ।

சங்காய நம:

६१ ,, शिशिरनाशनाय नमः ।

ஶிஶிரநாஶனாய நம:

६२ ॐ व्योमनाथाय नमः ।

வ்யோமனுதாய நம:

६३ ,, तमोभेदिने नमः ।

தமோபேதினே நம:

६४ ,, ऋग्यजुस्सामपारगाय नमः ।

ருக்யஜுஸ்ஸாமபார
காய நம:

६५ ,, घनवृष्टये नमः

கனவ்ருஷ்டயே நம:

६६ ,, अपांमित्राय नमः ।

அபாம்மித்ராய நம:

६७ ,, विन्ध्यवीथीप्लवङ्गमाय नमः ।

விந்த்யவிதீப்லவங்க
மாய நம:

६८ ,, आतपिने नमः ।

ஆதபினே நம:

६९ ॐ मण्डलिने नमः ।

மண்டலினே நம:

७० ,, मृत्येव ममः ।

ம்ருத்யவே நம:

७१ ,, पिंगलाय नमः ।

பிங்களாய நம:

७२ ,, सर्वतापनाय नमः ।

ஸர்வதாபனுய நம:

७३ ,, कवये नमः ।

கவயே நம:

७४ ,, विश्वाय नमः ।

விச்வாய நம:

७५ ,, महातेजसे नमः

மஹாதேஜஸே நம:

७६ ॐ रक्तय नमः ।
ரக்தாய

७७ ,, सर्वभवोद्भवाय नमः ।
ஸர்வபவோத்பவாய
நம:

७८ ,, नक्षत्रग्रहताराधिपाय नमः ।
நக்ஷத்ரக்ரஹதாராதி
பாய நம:

७९ ,, विश्वभावनाय नमः ।
விஸ்வபாவனாய நம:

८० ,, तेजसामपितेजस्विने नमः ।
தேஜஸாமபிதேஜஸ்
வினே நம:

८१ ,, द्वादशात्मने नमः ।
த்வாதசாத்மனே நம:

८२ ,, पूर्वायगिरये नमः ।
பூர்வாய கிரயே நம:

८३ ॐ पश्चिमायाद्रये नमः ।
பஸ்சிமாயத்ரயே நம:

८४ ,, ज्योतिर्गणानांपतये नमः ।
ஜ்யோதிர்கணனாம்
பதயே நம:

८५ ,, दिनाधिपतये नमः ।
தினாதிபதயே நம:

८६ ,, जयमूर्तये नमः ।
ஜயமூர்த்தயே நம:

८७ ,, जयभद्राय नमः ।
ஜயபத்ராய நம:

८८ ,, हर्यश्वाय नमः ।
ஹர்யஸ்வாய நம.

८९ ,, सहस्रांशवे नमः ।
ஸஹஸ்ராம்ஸவே நம:

९० ॐ अदित्याय नमः।
ஆதித்யாய நம:

९१ ,, उग्राय नमः।
உக்ராய நம:

९२ ,, वीराय नमः।
வீராய நம:

९३ ,, सारङ्गाय नमः।
ஸாரங்காய நம:

९४ ,, पद्मप्रबोधाय नमः।
பத்மப்ரபோதாய நம:

९५ ,, प्रचण्डाय नमः।
ப்ரசண்டாய நம:

९६ ,, ब्रह्मेशानाच्युतेशाय नमः।
ப்ரம்ஹேசாநாச்யுதே
சாய நம:

९७ ॐ सूर्याय नमः (सूराय नमः।)
ஸூர்யாய நம:

९८ ,, आदित्यवर्चसे नमः।
ஆதித்யவர்சஸே நம;

९९ ,, भास्वते नमः।
பாஸ்வதே நம:

१०० ,, सर्वभक्षाय नमः।
ஸர்வபக்ஷாய நம:

१०१ ,, रौद्रवपुषे नमः।
ரௌத்ரவபுஷே நம:

१०२ ,, तमोघ्नाय नमः।
தமோக்நாய நம:

१०३ ,, हिमघ्नाय नमः।
ஹிமக்நாய நம:

१०४ ॐ शत्रुघ्नाय नमः ।
சத்ருக்னாய நம:

१०५ ,, अमितात्मने नमः ।
அமிதாத்மனே நம:

१०६ ,, कृतघ्नघ्नाय नमः ।
க்ருதக்னக்னாய நம:

१०७ ,, देवाय नमः ।
தேவாய நம:

१०८ ,, ज्योतिषांपतये नमः ।
ஜ்யோதிஷாம்பதயே நம:

१०९ ,, तप्तचामीकराभाय नमः ।
தப்தசாமீகராபாய நம:

११० ,, वह्नये नमः ।
வஹ்நயே நம:

१११ ॐ विश्वकर्मणे नमः ।
விச்வகர்மணே நம:

११२ ,, तमोभिनिघ्नाय नमः ।
தமோபிநிக்னய நம:

११३ ,, रुचये नमः ।
ருசயே நம:

११४ ,, लोकसाक्षिणे नमः ।
லோகஸாக்ஷிணே நம:

११५ ,, भूतनाशनाय नमः ।
பூதநாஶநாய நம:

११६ ,, भूतस्रष्ट्रे नमः ।
பூதஸ்ருஷ்ட்ரே நம:

११७ ,, प्रभवे नमः ।
ப்ரபவே நம:

११८ ॐ पायते नमः ।
பாயதே நம:

११९ ,, तपते नमः ।
தபதே நம:

१२० ,, वर्षते नमः ।
வர்ஷதே நம:

१२१ ,, सुप्तेषुजाग्रते नमः ।
ஸுப்தேஷுஜாக்ரதே நம:

१२२ ॐ भूतेषुपरिनिष्ठिताय नमः ।
பூதேஷுபரிநிஷ்டிதாய நம:

१२३ ,, अग्निहोत्राय नमः ।
அக்நிஹோத்ராய நம:

१२४ ,, अग्निहोत्रिणां फलदाय नमः ।
அக்நிஹோத்ரிணாம் பலதாய நம.

१२५ ,, परमसमर्थाय भगवतेब्रह्मणे नमः
பரமஸமர்த்தாய பகவதேப்ரஹ்மணே நம:
